## மங்கோலியா



# ஏதோ வித்தியாசம்

*“முன்பைவிட நீ வித்தியாசமாக இருக்கிறாய்” என்று ஒரு வாலிபப்பெண் சொன்னாள்.*

ஷோமொவுக்கு கிறிஸ்தவத்தில் ஆர்வமே கிடையாது. அது மங்கோலியாவின் பாரம்பரிய மதம் அல்ல. மேலும், அவருக்கு எந்தக் கடவுள்மீதும் நம்பிக்கையும் கிடையாது. அவர் ஒரு நாத்திகர்.

பிறகு, மங்கோலியாவின் தலைநகரான ஊலான்படார்ரில் உள்ள ஒரு செவந்-டே அட்வென்ட்டிஸ்ட் சபைக்கு அவரது அம்மாவின் சகோதரி சென்றார். ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு போதகர் அங்கு சுவிசேஷக்கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தார்; எனவே ஆங்கிலம் கற்றுக்கொள்வதற்காக அந்தக் கூட்டங்களுக்குச் சென்றார். அந்த அட்வென்ட்டிஸ்ட் சபை வித்தியாசமாக இருப்பதாக உணர்ந்ததால், 18 வயதான தன் சகோதரியின் மகனை தன்னுடன் கலந்து கொள்ளும்படி அழைத்தார். “அது உண்மையில் அருமையான ஓர் இடம், உன்னைப்போல் நிறைய வாலிபர்கள் அங்கு வருகிறார்கள்” என்று சொன்னார்.

உடனே ஷோமொ என்கிற அந்த வாலிபர், “அது நம் பாரம்பரிய மதம் இல்லை. அது அந்நிய மதம்” என்று சொன்னார்.

ஆனாலும் அவனை தன்னுடன் அந்த ஆலயத்திற்கு வரும்படி அழைக்கத் தூண்டப்பட்டதால், அவனை அழைத்துக் கொண்டே இருந்தார். அங்கு வருகிற வாலிபர்கள் கித்தார் இசைத்து, பாடல் பாடுவதாகவும் சொன்னார்.

“அருமையாக இருக்கிறது” என்றார்.

ஷோமொ தன் அம்மாவின் சகோதரியுடன் ஆலயத்திற்குச் சென்

றார். அந்த ஆஸ்திரேலிய போதகரும் அவருடன் வந்திருந்தவர்களும் இவருக்குப் பிடித்திருந்தார்கள். இவர் அதற்குமுன் வெளிநாட்டினரைப் பார்த்ததே இல்லை. அவர்கள் சுவாரஸ்யமானவர்களாக இருந்தார்கள். மேலும், அங்கு இசையுடன் பாடப்பட்ட பாடல்களும் அவருக்குப் பிடித்திருந்தன. அருமையாக இருந்தது. தன் அம்மாவின் சகோதரியைப் போலவே அவரும் அந்தச் சபை வித்தியாசமாக இருப்பதை உணர்ந்தார். 'இவர்கள் அருமையானவர்களாக இருக்கிறார்கள். எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று யோசித்தார்.

அதன்பிறகு பலமுறை அந்தச் சபைக்குச் சென்றார் ஷோமொ. அட்வென்டிஸ்ட்டாக மாறினார். இயேசுவின்மீது தனக்கிருந்த அன்பை மற்றவர்களுடம் பகிர்ந்துகொள்ள அவருக்கு ஆர்வம் அதிகரித்தது. எப்படி?

அட்வென்டிஸ்ட்டாக மாறி ஒரு வருடத்திற்கு பிறகு, ஷோமொ தன் நண்பர்களைச் சந்திப்பதற்கு கிராமப்பகுதிகளுக்குச் சென்றார்; அவர்கள் இவர் ரொம்பவும் மாறியிருப்பதாகச் சொன்னார்கள்.

“முன்பைவிட நீ வித்தியாசமாக இருக்கிறாய்” என்று ஒரு வாலிபப்பெண் சொன்னாள்.

“நீ மாறிவிட்டாய், எப்படி?” என்று இன்னொரு வாலிபப்பையன் கேட்டான்.

“தேவனைக் கண்டுகொண்டேன்” என்று ஷோமொ சொன்னார்.

அந்த வாலிபர்கள் சிரித்தார்கள். அவர்கள் கிறிஸ்தவர்கள் கிடையாது; தேவன்மீது அவர்களுக்கு நம்பிக்கையும் கிடையாது.

அந்தச் சமயத்தில், அங்கு ஆறு மாதங்களாக மழைபெய்யாமல் இருந்தது. புற்கள் காய்ந்துபோயிருந்தன. அது மிகப்பெரிய பிரச்சினை. குதிரைகள், மாடுகள், ஆடுகள், ஒட்டகங்கள் ஆகியவைதாம் மங்கோலியர்களின் வாழ்வாதாரம்; உணவு, கம்பிளி, போக்குவரத்து ஆகியவற்றிற்கு அவற்றைத்தான் பயன்படுத்துவார்கள். புல் இல்லாவிட்டால் அவற்றிற்கு தீனி கிடைக்காது.

ஏதாவது அற்புதம் நிகழ்ந்தால்தான் அந்த வறட்சியைப் போக்க முடியும். எனவே அந்த வாலிபர்கள் ஷோமொவின் கடவுளைச் சோதித்துப்பார்க்கத் தீர்மானித்தார்கள்.

“உன்னுடைய கடவுள் உண்மையிலேயே இருந்தால், மழைக்காக ஜெபித்து வரச்செய்” என்று ஒருவன் சொன்னான். மற்றவர்களும் ஆமோதித்தார்கள்.

“உன் கடவுளால் என்ன செய்ய முடியுமெனப் பார்ப்போம்” என்று சொன்னார்கள்.

ஷோமொ எல்லா வாலிபர்களையும் அழைத்தார்.

“சரி அப்படியே செய்வோம், நாம் ஜெபிக்கலாம்” என்று சொன்னார்.

தேவனை நோக்கி மழைக்காக ஜெபித்தார்.

அடுத்தநாள் காலையில் மழை பெய்தது. முதலாவது இலேசாக துளி விழுந்தது; பிறகு மழை கொட்டோ கொட்டெனக் கொட்டியது.

வாலிபர்களுக்கோ அதிர்ச்சி!

ஷோமொவிடம் ஓடிவந்து, "மழை பெய்கிறது! மழை பெய்கிறது!" என்றார்கள்.

அவர்களில் சிலர் தேவனை நம்பத் தொடங்கினார்கள்.

"உன் கடவுள் உண்மையிலேயே இருக்கிறார்" என்று ஒருவர் சொன்னார்.

"அவரைப்பற்றி நான் அதிகம் அறியவேண்டும்" என்று இன்னொருவர் சொன்னார்.

10 வாலிபர்கள் அடங்கி ஒரு சிறுகுழுவை ஷோமொ ஆரம்பித்தார். அவர்களுக்கு வேதாகமத்தை வாசித்துக் காண்பித்தார்; அவர்களோடு சேர்ந்து ஜெபித்தார்; கிறிஸ்தவப் பாடல்கள் சொல்லிக் கொடுத்தார். ஒரு மாதம் தினமும் கூடினார்கள். பிறகு நகரத்திலிருந்து தன் வீட்டிற்கு ஷோமொ திரும்பினார்.

அந்த அற்புதமான மழை நிகழ்வுக்குப் பிறகு பல வருடங்கள் கடந்திருந்தன. ஷோமொ அட்வென்ட்டிஸ்ட் போதகரானார்; இப்போது மங்கோலியாவின் தலைநகரான ஊலான்படார்ரில் ஊழியம் செய்துவருகிறார். அந்த அற்புதம் நடந்த இடத்தில் இன்னும் சபை எதுவும் நிறுவப்படவில்லை. ஆனால் அந்த மழையைப் பார்த்த வாலிபர்கள் தேவனுக்கு உண்மையாக இருக்கிறார்கள். அவர்களில் பலருடைய பெற்றோரும் தேவனை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

"அங்கு சபை இல்லை, போதகர் இல்லை, ஆனால் இன்றும் தேவனில் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கிறார்கள்" என்று சொன்னார்.

பரலோகத்தின் தேவனைபற்றி வித்தியாசமான அனுபவத்தைப் பெற்றதால் நம்புகிறார்கள்.

மங்கோலியாவின் தலைநகரான ஊலான்படார்ரில் புதிதாக சிறுவர் மறுவாழ்வு மையம் ஒன்று ஆரம்பிப்பதற்கு இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி பயன்படும்; அங்கே சிறுவர்களும் அவர்களது பெற்றோரும் பரலோகத்தேவனை அறிந்து கொள்ள முடியும். மார்ச் 29ம் தேதி, விசேஷமாக காணிக்கை கொடுக்கத் தீர்மானித்திருப்பதற்கு நன்றி.

---

## கதைக் குறிப்புகள்

- வரைபடத்தில் மங்கோலியாவின் தலைநகர் ஊலான்படார்ரைக் காண்பியுங்கள்.
- ஷோமொவின் முழுப்பெயர் ஷோல்மொன்பயார்.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- வட–ஆசியா பசிஃபிக் டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதிவிறக்க: bit.ly/nsd-2025.
- 1926இல், மங்கோலியாவில் மங்கோலிய குடில் பாணியில் மங்கோலிய ஊழிய நிலையம் ஒன்று கட்டப்பட்டது. மங்கோலிய ஊழியக்களமானது சீன–மங்கோலிய எல்லையில் உள்ள சீனாவின் கல்கன் எனுமிடத்தில் 1930இல் நிறுவப்பட்டது.